## பாறைகள்

பாண்டிச்சேரிக் கடலோரப் பாறைகள்
எனக்குக் கற்றுக் கொடுப்பதெல்லாம்
சும்மா இருக்கும் கலை.
கடல் காற்றை அனுபவித்தபடி
வெறுமனே கடலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு
கரடு முரடாய்க் கோணல் மாணலாய்க்
குவிந்து கிடக்கின்றன.
பறந்து வந்து தன்மேல் கொஞ்ச நேரம் சிறகு மடித்து
மீண்டும் பறந்து போகும் காகங்கள் பற்றி
எந்த விதத் தீர்ப்புகளும் எழுதாமல் வாழும் பாறைகளை
நான் நேசிக்கிறேன்
என் உடம்பை நான் நேசிப்பதுபோல.
ஒவ்வொரு பாறையும் ஓர் அபூர்வச் சிற்பம்.
கடலோரமே கருத்த பாறைகளின் சிற்பக் கூடம்.
ஒவ்வொரு நாளையும்
தனித் தனி ஓவியமாய்த் தீட்டுகின்றன பாறைகள்.
கடந்த காலத்தின் நிழல் விழாத நிகழ்காலத்தைச்
சுவாசித்தபடி
தொடரும் அவற்றின் தியானத்தை
நான் கலைக்க விரும்புவதில்லை.
இன்னும் எத்தனை நாள்
இந்தக் கடலோரத்தில் இருப்போம்?
கனவு அல்லது நனவு -- இவற்றில் எதில் வாழ்வது?
கேட்டு முடிக்கப் பெறாத கேள்விகள்.
எழுதி முற்றுப் பெறாத வாக்கியங்கள்.

மீண்டும் மீண்டும் மனக் குகைக்குள் எதிரொலிகள்
எழுப்பாமல்
கலப்படமில்லாத தூய இருத்தலின் சாட்சியாய் பாறைகள்.
நாடித் துடிப்பு, இழந்த காதல், சாப்பாட்டுச் சங்கிலி,
நல்லவன் , கெட்டவன் , நீதி, அநீதி
எதைப் பற்றியும் கவலை இன்றி
தங்களைத் தாங்களே வசியம் செய்து கொண்டு
முணுமுணுப்பின்றி கடலோரத்தில் வாழ்கின்றன பாறைகள்
ஞானிகளைப் போல்.
--- 10 ஆகஸ்டு 2020